DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 41/2025

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்.**

| | |
|---|---|
| Name | கோகிலா |
| Father / Husband Name | பச்சையப்பன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 24**.07.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ரெட்டிபாளையம் வசித்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். கடந்த 06.12.2021 காலை 7 முதல் 7.30 மணிக்குள் எனது கணவர் பச்சையப்பன் எனது குழந்தை சித்தார்த் பால் வாங்குவதற்காக பிள்ளையார் கோவில் அருகே சென்றபோது ஆஜர் எதிரி லட்சுமி என்பவர் முன்விரோதம் காரணமாக என் குழந்தை மேல கல் தூக்கி எரியும் போது எனது கணவர் தடுத்துவிட்டார். அப்போது அக்கபக்கம் தண்ணீர் பிடித்து கொண்டு இருந்தவர்கள் என் குழந்தையை மீட்டனர். எனது மாமியார் என்னிடம் வந்து கூறியபோது தான் நான் சம்பவயிடம் சென்று என் குழந்தையும் என் கணவரையும் அழைத்து கொண்டு வரும்போது என்னுடயை துணியையும் என் கணவரின் துணியையும் கிழித்து என்னிக்கா இருந்தாலும் உன் குழந்தையின் சாவு என்கையில் தான் என்று என்னை மிரட்டினார். பிறகு என் குழந்தையை ரெட்டிபாளையம் அரசு ஆரம்ப சுகாதார மருத்துவமணைக்கு அழைத்து கொண்டு சென்றேன். அன்று இரவு லட்சுமியும் அவருடைய இரண்டாவது மகளின் கணவரும் எங்கள் வீட்டிற்கு வந்து நீ காவல் நிலையம் சென்று புகார் கொடுக்க கூடாது என்று மிரட்டினார்கள். நான் மறுநாள் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகாரை நான்தான் கொடுத்தேன். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

என் கணவர் எல்லையம்மன் கோவில் அருகே பால் வாங்குவதற்காக சென்றார். எங்கள் வீட்டில் இருந்து 2 நிமிடத்தில் நடந்து செல்லும் தூரத்தில் பால் வாங்குவதற்காக சென்றுவிடலாம். சம்பவம் நடந்த இடத்திற்கும் எங்கள் வீட்டிற்கும் இடையே சுமார் 400 மீ தூரம். என் குழந்தைக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். நில பிரச்சனை சம்பந்தமாக ஆஜர் எதிரியும் என் கணவருக்கும் முன்விரோதம் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக ஆஜர் எதிரி என் கணவர் மீது புகார் கொடுத்தது தெரியுமா என்றால் தெரியும். சம்பவம் பற்றி நேரடியாக பார்த்ததாக புகாரில்

கூறியுள்ளேனா என்றால் கூறினேன். எத்தனை கற்கள் என் குழந்தை மீது எரிந்தார்கள் என்றால் சுமார் 15 கற்கள். புகாரில் ஆஜர் எதிரியும் அவரது மருமகனும் சம்பவத்தினத்தன்று இரவில் என்னை மிரட்டியது புகாரில் குறிப்பிட்டு உள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். புகாரை சம்பத்தன்று கொடுக்காமல் மறுநாள் ஏன் கொடுத்தேன் என்றால் எனது மாமியார் நான் கர்ப்பமாக இருப்பதால் கொடுக்க வேண்டாம் என்று கூறினார். புகார் மறுநாள் காலை 11 –11.30 மணிக்குள் கொடுத்தேன். புகாரை நான்தான் காவல் நிலையத்தில் உள்ளே வைத்து எழுதினேன். போலிசார் சொல்ல நான் எழுதினேன் என்றால் இல்லை. புகார் கொடுக்கும் போது ஆஜர் எதிரி எங்கள் மீது புகார் கொடுத்த விவரத்தை சொன்னார்களா என்றால் இல்லை. புகார் கொடுத்த மறுநாள் எனது வீட்டில் வைத்து சுமார் 11–12 மணியளவில் போலிசார் என்னை விசாரித்தார்கள். அதன்பின் என்னை விசாரிக்கவில்லை. விசாரணையில் மாமியார் சொல்லிதான் புகாரை காலதாமதாக கொடுத்த விவரத்தை சொன்னேனா என்றால் இல்லை. எங்கள் ஊரில் இருந்து காவல் நிலையத்திற்கு 30 நிமிடத்தில் சென்றுவிடலாம். சம்பதினத்தன்று நான் புகார் கொடுத்திருக்கலாம் என்றால் எனது கணவர் ஆஜர் எதிரியின் கையை உடைத்ததால் அவர் என் கணவர் மீது கொடுத்த புகாருக்காக நான் பொய்யான புகாரை சம்பவத்திற்கு மறுநாள் கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. கன்னியம்மாள் சல்ஜா பெயர் தெரியாத பாட்டி என் குழந்தையை மீட்டனர். மேற்படி விவரத்தை போலிஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். சம்பவத்தன்று ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நாங்கள் மூவரும் காலை 8 மணியளவில் சென்றோம் என் மகன் சித்தார்த் பெயரில் OP சீட்டு வாங்கினோம். நாங்கள் மூவரும் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் முருகன் என்பவரின் வீட்டுமுன் நடந்தது. நான் சொல்வது தவறு என்றாலும் சம்பவம் மேற்படி முருகன் என்பவர் வீட்டின் முன் நடக்கவில்லை என்றால் சரியல்ல. புகார் போலிசார் சொல்ல சொல்ல தான் நான் எழுதி ஆஜர் எதிரி மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரி சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 41/2025

Miscellaneous :

Sessions : PW 2

Deposition of Witness for

**எதிரி ஆஜர்.**

| | |
|---|---|
| Name | பச்சையப்பன் |
| Father / Husband Name | ராமலிங்கம் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 24**.07.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ரெட்டிபாளையம் வசித்து வெல்டிங் வேலை வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 06.12.2021 ம் தேதி காலை 7.30 மணியளவில் நான் பால் வாங்குவதற்காக பால் பூத்திற்கு செல்லும் போது ஆஜர் எதிரி என்னை பார்த்து தெவிடியாலுக்கு பொறந்தது என் நாத்தார் வீட்டில் போய் என் சொத்தை கேட்டு என்னை டார்ச்சர் பண்ணுது என்று அசிங்கமாக பேசினார். நான் பால் வாங்கிகொண்டு திரும்பி பிள்ளையார் கோவில் அருகே வரும் போது எதிரி மீண்டும் பேசிக்கொண்டு இருந்தார். எதிரி என்னை பார்த்து தெவிடியாலுக்கு பொறந்தது என்னை கண்டுக்காம போகுது என்று அசிங்கமாக பேசி பொட்டா பாடு உனுக்காடா புள்ளை பொறந்தது என்று கருங்கல்லை தூக்கி எனக்கு முன் சென்ற என் மகன் மீது போட வந்தார் உடனே என் அம்மா குழந்தை என்று சத்தம் போட்ட உடனே நான் குழந்தையை தூக்கிவிட்டேன். அப்போது செங்கல்லை எடுத்து என்னை அடிக்க வந்தபோது நான் குழந்தையுடன் திரும்பிவிட்டேன். என் முதுகில் பட்டது. பின்னர் கல்லை எடுப்பதற்காக மணல் மீது ஏறினார். வேப்பரமரம் தடுக்கி கீழே விழுந்தார். ராமாபுரம் மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு முதுகில் ரத்தம் கட்டியதால் ஆயில்மெண்ட் கொடுத்தார்கள். பின்னர் நான் வேலைக்கு சென்றுவிட்டேன். அன்று இரவு ஆஜர் எதிரி ஆட்களுடன் வந்து மிரட்டினார்கள். பின்னர் என் குழந்தையை மனைவி மருத்துமனைக்கு அழைத்து சென்றார். எதிரி அசிங்கமாக பேசியதால் ஒருமாதம் காலம் எனக்கு மனஉளைச்சல் ஏற்பட்டு நான் வீட்டை காலி செய்துவிட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நானும் என் மனைவி மற்றும் குழந்தையுடன் சேர்ந்து மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் நியாபகம் இல்லை. குழந்தைமுன் செல்ல பின்னாடி 3 அடி தூரத்தில் நான் சென்றுகொண்டிருந்தேன். சம்பவம் முத்து என்பவரிடன் வீட்டருகில் நடந்தது. சம்பவத்தை யாரும் தடுக்க வில்லை. சம்பவம் காலை சுமார் 7.20 மணியளவில் நடந்தது. கிழிந்த என் சட்டையை போலிசிடம் காண்பித்தேன் என்றால் காண்பித்தேன்.

மேற்படி சட்டை வெள்ளை கலரில் கோடு போட்ட சட்டை. சம்பவம் நடந்து காவல் நிலையம் உடனே ஏன் காவல் நிலையம் செல்லவில்லை என்றால் இது பெரிய பிரச்சனை இல்லை என்பதால் நான் காவல் நிலையம் செல்லவில்லை. சம்பவத்தின் இரவு ஆட்கள் வந்து மிரட்டியபோது நான் வேலையில் இருந்து வந்துகொண்டிருந்தேன். மிரட்டிய சம்பவம் எனது மனைவி கூறிதான் தெரியும். புகார் கொடுக்க நானும் என் மனைவியுடன் சென்று காவல் நிலையம் உள்ளே வைத்து எனது மனைவி புகார் எழுதி கொடுத்தார். ராமாபுரம் அரசு ஆரம்ப சுகாதார மருத்துவமனைக்கு காலை 09.00 மணியளவில் சென்றேன். நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1.5 வயது குழந்தை நடு ரோட்டில் நடந்து செல்ல இயலாது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் எனக்கும் நிலப்பிரச்சனை 2002 ல் சம்பந்தமாக பிரச்சனை இருந்துவருகிறது. போலிசாரிடம் ஆஜர் எதிரி அடிக்க பயன்படுத்திய கற்களை காண்பித்தேனா என்றால் இல்லை. ஆஜர் எதிரி அந்த கற்களை எடுத்து சென்றுவிட்டார். இந்த சம்பவத்திலேயே எதிரியும் என் மீது புகார் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் 3 நாட்கள் கழித்து தெரியும். நான் வேலைக்கு சென்றதால் போலிசார் என்னை விசாரிக்கவில்லை வீட்டில் என் மனைவியை விசாரித்தார்கள். சம்பவத்தில் நான்தான் ஆஜர் எதிரியின் கையை உடைத்துவிட்டு தற்போது எதிரி என் மீது கல்லை கொண்டு தாக்கினார் என்று பொய்யாக வழக்கு தொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி கொடுத்த புகாரை மறைக்க நானும் என் மனைவியும் எதிரி மீது சுமார் 1 1/2 நாள் கழித்து பொய்யாக வழக்கு தொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 41/2025

Miscellaneous :

Sessions : PW 3

Deposition of Witness for

**எதிரி ஆஜர்.**

| Name | ரகுவரன் |
|---|---|
| Father / Husband Name | சேகர் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 24**.07.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ரெட்டிபாளையம் வசித்து AC மெக்கானிக் வேலை செய்து வருகிறேன். சாட்சி ஸ்டானிலை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அசாஆ 2ஆக குறியீடு செய்யப்படுகிறது)** தேதி மாதம் நியாபகம் இல்லை சுமார் 4 வருடங்களுக்கு முன்பு மதியம் சுமார் 2.30 மணியளவில் நான் மதிய உணவு முடித்துவிட்டு நான் வீட்டில் இருந்தபோது. லட்சுமியும் பச்சையப்பன் என்பவருக்கும் நடந்த சண்டை சம்பந்தமாக போலிசார் வரைபடம் வரைந்தார்கள். நானும் ஸ்டானின் ராஜ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

பெண் போலிசார் என்னை விசாரணை செய்தார்கள் அவர் எந்த பதவி என்று எனக்கு தெரியாது. நான் கையொப்பமிட்ட தாள் பேனாவில் எழுதப்பட்டிருந்தது. அந்த தாளில் எந்த மைய் என்று நியாபகம் இல்லை. நான் கையொப்பமிட்ட தாளில் இருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். கையொப்பமிட்ட தாளில் லட்சுமி பச்சையப்பன் அவர்கள் பெயர் மற்றும் வரைபடம் மட்டும் தான் தெரியும். வரைபடம் எதற்காக வரையப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் பற்றி எனக்கு தெரியாது போலிசார் கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன். சம்பவத்தன்று நான் அவசரமாக வேலைக்கு சென்றுவிட்டதால் சம்பவம் பற்றி முழுவதுமாக எனக்கு தெரியாது மறுநாள் வீட்டில் இருப்பவர்கள் சொல்லிதான் தெரியும். போலிசார் கேட்கும்போது இது பற்றி கூறினேன். பிள்ளையார் கோவிலில் வைத்து போலிசார் கையொப்பம் வாங்கினார்களா என்றால் சரிதான். அதன்பின்னர் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 41/2025

Miscellaneous :

Sessions : PW 4

Deposition of Witness for

**எதிரி ஆஜர்.**

| | |
|---|---|
| Name | முருகன் |
| Father / Husband Name | கோவிந்தசாமி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 24**.07.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ரெட்டிபாளையம் வசித்து மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். தேதி மாதம் நியாபகம் இல்லை. சுமார் 2 வருடங்களுக்கு முன் ஒரு நாள் நான் வேலைக்கு சென்றுவிட்டு மாலை விட்டிற்கு வரும்போது லட்சுமி மற்றும் பச்சையப்பன் இருவருக்கும் இடையே சண்டை ஏற்பட்டதாக கூறினார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

கடந்த 06.12.2021 ம் தேதி காலை 07.30 மணிக்கு பச்சையப்பன் அவர் குழந்தையுடன் பால் வாங்க சென்றாரா என்றால் தெரியாது. குழந்தை மீது ஆஜர் எதிரி கல்லை கொண்டு எரிந்தாரா என்றால் தெரியாது. சண்டையை விலக்கிவிட்டு தற்போது ஆஜர் எதிரிக்கு பயந்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.